பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# உதயன்

விலை ரூபா 3-50

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத ஹூ ஆடி ௴ 05 ௳ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ் பிறை 27 (21 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 149

★ ஈழத்தமிழரைப் பாதுகாக்க

# இராஜதந்திர ரீதியில் இந்தியா நடவடிக்கை

## பிரதமர் வி. பி. சிங் அறிவிப்பு
## ராணுவ வழியில் தலையிட முடியாது என்கிறார்

புதுடில்லி, ஜூன் 21

ஈழத் தமிழரின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க ராஜதந்திர ரீதியிலான புதிய முன்முயற்சிகளை இந்தியா எடுக்க இருப்பதாக இந்தியப் பிரதமர் வி. பி. சிங் நேற்று அறிவித்தார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் இலங்கைப் பிரச்சினை குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் சிங் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் அல்லற்படுவது குறித்து இந்தியாவின் கவலையை இந்த மாநாட்டில் வைத்து அவர் மீண்டும் வெளியிட்டார்.

ஈழப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏதும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

இலங்கையில் சர்வதேச அமைப்புகள் மற்றும் நாடுகளின் ஒத்துழைப்புடன் ஈழத் தமிழருக்கான அகதி முகாம்களை அமைக்க ஏற்பாடு செய்வதன் மூலம் இந்தியா ஈழத்தமிழருக்கு உதவ முடியுமா என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார். (உ-எ)

### தேற்றாத்தீவில் 5 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 21

தேற்றாத் தீவு அகதி முகாமிலிருந்து நேற்று முன்தினம் ஐந்து ஆண்களைஇராணுவத்தினர் கைது செய்து கல்முனை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

### 5 சிப்பாய்கள் கால்களை இழந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 21

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து கடந்த புதனன்று வெளியேற முற்பட்ட இராணுவத்தினரில் ஐந்து பேர் மிதிவெடியால் சிக்கி கால்களை இழந்தனர் என விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

ஈழத் தமிழரை அழிப்பதற்கு

## தொற்று நோய் பரப்பும் இரசாயனக் குண்டுகளா?

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஸ்ரீலங்கா படையினர் யாழ். நகரில் வீசிவரும் புதுவித இரசாயனக் கலவைகளைக் கொண்ட பீப்பாய்க் குண்டுகள் மக்களுக்கு தொற்று நோய் பரப்பக்கூடிய நோய்க் கிருமிகளைக் கொண்டவையாக இருக்கலாம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் சந்தேகம் தெரிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்தச் சந்தேகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

சர்வதேசங்களினாலும் தடை செய்யப்பட்ட ''நேபாம் குண்டை'' ஒத்த- எரியூட்டும் பீப்பாய்களைத் தொடர்ந்து தமிழீழம் எங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலிகள் திடீர் தாக்கு

சாவகச்சேரி, ஜூலை 21

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6-30 மணியளவில் மட்டுவில், நுணாவில் பகுதிகளுக்கு மேலாகப் பறந்த ஆறு ஹெலிகளில் இரண்டு அப்பகுதிகளை நோக்கி திடீரென வேட்டுக்களைத் தீர்த்தன.

அன்று காலையும் சாவகச்சேரிப் பகுதியில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றது தெரிந்ததே.

### முச்சந்தி முரளி



பொம்மர் வருகுது... நாற்றக் குண்டு போடுவினம்... என்ன நாசத்தை போடுகினமோ... ஓடித் தப்புவம்...!

'தமிழ் மக்கள் பட்டினியால் சாவு' - இதற்கு மத்தியிலும்

## இனப்படுகொலைக்கு சில அமைப்புகள் துணை போவதாக புலிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 21

சிங்கள அரசின் இனப்படுகொலைக்கு சில சர்வதேச அமைப்புகள் ஏதோ ஒரு வகையில் துணைபோவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

-விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''பட்டினியால் தமிழ் மக்கள் சாவு'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த இரண்டு நாட்களில் மட்டக்களப்பில் 25 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பட்டினியால் இறந்துள்ளனர்.

தமிழீழத்தில் உணவின்றிப் பட்டினியால் தற்போதுதான் முதன் முதலில் மக்கள் இறந்துள்ளனர்.

சிங்கள அரசால் அமுல்படுத்தப்படும் உணவுத் தடையால் - எரிபொருள் தடையால்-மருத்துவத் தடையால்- தொடர்ந்தும் பல மக்கள் இறக்கும் சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது.

ஜூன் 11 ஆம் திகதியில் இருந்து இன்று வரை 3 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் சிங்களப் படையால் கொல்லப்பட்டுள்ளனர். 8 லட்சத்திற்கும் மேலான தமிழ் மக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரம் தொடர்ந்து தொடர்புகள் இழந்த நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வவுனியா நகரம் தொடர்ந்து வெளிமாவட்டங்களுடன் தொடர்பு அற்ற நிலையில் உள்ளது. நகரில் இருந்து நான்கு மைல் தூரத்துக்கு அப்பால் யாழ்ப்பாணம்-மன்னார் வீதிப் பக்கத்தில் மட்டும் தமிழர்கள் இருக்கின்றனர்.

வவுனியாவில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய அரச அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா நிலைமை பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா நகரில் தமிழர் சுதந்திரமாக நடமாடக் கூடிய சூழ்நிலை இல்லை. தமிழர்களின் சொத்துக்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன; கடந்த ஒரு மாதமாக நகரம் வெளிக் கிராமங்களுடன் எந்தத் தொடர்பும் இன்றி உள்ளது.

மன்னார் வீதி, யாழ்ப்பாணம் வீதி வழியாக எவரும் வவுனியா நகருக்குள் செல்ல முடியாது. அப்பாதை வழியாகச் செல்பவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

வவுனியா நகரில் இருந்து வெளியேறிய 10 ஆயிரம் குடும்பங்களில் 4 ஆயிரம் குடும்பங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 100 பேர் கைது

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கல்லாறு பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கிருந்த பொதுமக்களில் சுமார் 200 பேரைக் கைது செய்து கல்முனை இராணுவ முகமுக்கு கொண்டு சென்றதாக அறிய வந்தது.

இதே வேளையில் கல்முனையில உள்ள தமிழர்கள் சிலரை ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தோர் சுட்டுக் கொன்றதாகவும் கூறப்பட்டது. [உ-9]

## தமிழர் படுகொலையை கண்டித்து தமிழகம், புதுவையில் ஹர்த்தால்

### மூலை முடுக்கு எங்கும் முழு அளவில் நடந்தது

சென்னை, ஜூலை 21

இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் — அவர்களுக்குத் தமது ஆழ்ந்த வேதனையைத் தெரிவிக்கும் விதத்திலும் நேற்று தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் பன்னிரண்டு மணி நேர ஹர்த்தால் வெற்றிகரமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இருமாநிலங்களிலும் நேற்று சகல நடவடிக்கைகளும் முழு அளவில் ஸ்தம்பித்தன.

சென்னை நகர் வெறிச்சோடி இருந்தது.

விமான, ரயில் போக்குவரத்து ஸ்தம்பித்தன. அசம்பாவிதங்கள்ஏதும் இடம்பெறவில்லை.

ஹர்தால் குறித்து தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி பத்திரிகையாளர்கள் மத்தியில் கூறியதாவது:-

தமிழகத்தில் நகரங்களிலும், கிராமங்களிலும் மூலை முடுக்குகளிலும், ஹர்த்தால் முழுமையாக நடைபெற்றுள்ளது. இலங்கைப் பிரச்சினையில் தமிழக மக்கள் தங்கள் உணர்வை எல்லோரும் ஓர் அணி

[4ஆம் பக்கம் பார்க்க]

### பிரேமாவின் கொடும்பாவி சென்னையில் எரிப்பு

லண்டன், ஜூலை 21

தமிழ் நாட்டில் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கையின் போது ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொடும்பாவி ஒன்று எரிக்கப்பட்டது.

சென்னையில் வைத்து திராவிடர் கழக உறுப்பினர்கள் சிலர் இந்த கொடும்பாவியை எரித்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து 9 பேர் கைதாகினர்.

இதேவேளை ஹர்த்தால் வேளையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் சமூக விரோத கும்பல்களை சேர்ந்த சுமார் இருநூறு பேர் காலையில் கைதாகி மாலையில் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

● பட்டினியால் வாடும் தமிழருக்கு

## விமானம் மூலம் உணவு போட கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜூலை 21

பட்டினியால் வாடும் ஈழத் தமிழருக்கு 1987 ஆம் ஆண்டில் செய்ததைப் போல விமானம் மூலம் உணவு போட நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசாங்கத்தைக் கேட்கப் போகின்றேன்.

— இவ்வாறு நேற்று சென்னையில் வைத்துத் தெரிவித்தார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

ஈழத்தமிழர்கள் தாங்கள் அமைதியாக வாழ எது சரியான வழி என்று கருதுகிறார்களோ அதை நாம் ஆதரிப்போம் என்றும் அவர் சொன்னார். [உ-9]

யாழ் நகரப் பகுதி மீது

## விமானத்திலிருந்து நேற்றும் நாற்றம் வீசும் குண்டுகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

துர்நாற்றம் வீசும் கரைசலைக் கொண்ட புதுவிதக் ''குண்டுகள்'' நேற்றும் யாழ் நகரப்பகுதி மீது வீசப்பட்டன.

நேற்று மாலை 6.30 மணியளவில் திடீரென நகரத்துக்கு மேல் பறந்து வந்த விமானம் ஒன்றில் இருந்து சுமார் பதினைந்து வரையான '' குண்டுகள்'' அடுத்தடுத்து தள்ளிவிடப்பட்டன.

இவை யாழ். றக்கா வீதி, இராசாவின்தோட்டம் வீதி, நாவலர் வீதியில் ஆனைப்பந்திச் சந்தி, இலுப்பையடிச் சந்தி, ரயில்ப்பாதைக்கடவை ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளிலும் வீதிகளிலும் விழுந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ★ இந்திய எம்.பிக்கள் குழு இங்கு வரும்

சென்னை, ஜூலை 21

இலங்கைப் பிரச்சினை குறித்து நேரடியாகக் கண்டறிவதற்கு இந்திய எம்.பிக்கள் குழு எதிர்வரும் செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் இலங்கை வரும்.

இந்திய நாடாளுமன்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 35 தமிழர்களின் சடலங்கள் எரிந்து கருகிய நிலையில்!

### மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் 35 தமிழர்களின் சடலங்கள் எரிந்து கருகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களே இவ்வாறு தீயிட்டு கொளுத்தப் பட்டதாகவும் சொல்லப்பட்டது.

பழுகாமத்தில் 9 சடலங்களும், கோவில் போரதீவில் 12 சடலங்களும், பெரிய போரதீவில் 8 சடலங்களும், வெல்லாவெளியில் 5 சடலங்களும், கற்சேனையில் ஒரு சடலமும் கருகிய நிலையில் காணப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மட்டக்களப்பு நகரத்தில் தினமும் 5 அல்லது 6 தமிழர்களின் சடங்லகள் எரிந்த நிலையில் காணப்படுவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-9)

## ஈழ அகதிகளை திருப்பி அனுப்புக! கலைஞரைக் கேட்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 21

தமிழகம் சென்றுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பி வைக்கும்படி தமிழக முதலமைச்சர் கருணாநிதியைத் தான் கேட்டிருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒத்திவைப்புப் பிரேரணை மீது சுதந்திரக் கட்சி எம்.பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் அமைச்சர் முன்கண்ட தகவலை வெளியிட்டார்:

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் இலங்கைத் தமிழ் அகதிகளை மன்னார் அகதி முகாமில் வைத்து பராமரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலைமை சீரானதும் அவர்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா சொன்னார். (உ-எ)

### சுபநேரம்

21- 7- 90

சனிக்கிழமை ஆடி 05

சுபநேரம்!
3-01— 4-31

இராகுகாலம்
09-01—10-31

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணாடிஅலுமாரி, மேசை கதிரை, குளிர்சாதனப் பெட்டி, புதிய எஸ்பெஸ்ரஸ் சீற், பனைமரம், திராந்தி, புதிய நிலைகள், கதவுகள், ஓடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 195, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (13781)

### தவறிவிட்டது

எறிக் கென்றிசன் முருங்கன் என்ற முகவரியுடைய 691940136V எனது அடையாள அட்டை கடந்த 12 ஆம் திகதி இளவாலைக் கும்-மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (13784)

### வெளிவந்துவிட்டது

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly? By Nagaratnam B Sc [Cey] நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு எந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்க்கும் இலகுவாகக் கணிப்பீடு செய்ய உதவும் நூல். (சி-4722)


# எம்மை வலுப்படுத்த நிதி தேவை தாய்மார்கள் உதவ வேண்டும்

## விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21

தமிழ் மக்களின் ஆதரவுடன் உறுதியுடன் போரிடும் எமது போராளிகளின் வீரத்துக்கும் தியாகத்துக்கும் ஈடு கொடுக்க முடியாமல் ஸ்ரீலங்கா அரசு நிலை தடுமாறிக் கொண்டிருக்கிறது. எம்மை மேலும் வலுப்படுத்த நிதி தேவைப்படுகிறது. தாய்மார் தமது நகைகளைத் தந்து உதவ வேண்டும்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அடிமை வாழ்வுக்கு இதனோடு விடிவு கண்டே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்ட அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும், தமிழினத்தை பூண்டோடு அழிப்பதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டு பல வழிகளிலும் தன் அழிப்பு நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டு வரும் ஸ்ரீலங்கா இனவாத அரசுக்குமிடையே தீவிர யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில் எம்மை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நிதி அத்தியாவசியமாகிறது. அதனால்தான் நாட்டைமீட்கும் கடமையை நன்குணர்ந்து கொண்ட உங்களிடம் பவுண் கேட்டு வருகின்றோம்.

மீளச்செலுத்தும் கடன் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் குறைந்தது இரண்டு பவுண் தங்கமாவது தரப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்

தாய் மார்கள் தங்கள் பிள்ளைகளை போராட்டத்துக்கு மனப்பூர்வமாக அனுப்ப வேண்டும்.

உயிரற்ற உடலை அலங்கரிப்பது போன்றதுதான் சுதந்திரமற்ற பூமியில் இருந்து சிங்காரித்துக் கொள்வது. மரணங்களுக்குள் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையிலுமா நகைகளை கழற்றி தமிழீழ மீட்பு நிதிக்கு வழங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இனியும் மௌனமாக இருப்பதற்குரிய நேரமல்ல இது.

இப்படி அந்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி பாரதீயஜனதா இன்று விவாதம்

சென்னை, ஜூலை 21

பாரதிய ஜனதா கட்சியின் தேசியக்குழுவின் இரண்டுநாள் கூட்டம் இன்று சனிக்கிழமை சென்னையில் ஆரம்பமாகிறது.

இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை, அதன் காரணமாக தமிழ் நாட்டுக்கு வந்து சேரும் அகதிகள் பிரச்சினை ஆகியன குறித்தும் தேசியக் குழு விவாதித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் என்று கட்சியின் அனைத்திந்தியச் செயலாளர் ஒ. எம். இராஜகோபால் சொன்னார்.

# அச்சுவேலி, வயாவிளானில் விவசாயிகளுக்கு பெருநஷ்டம்

கோப்பாய், ஜூலை 21

கடந்த ஒருமாத காலமாக நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அச்சுவேலி, வயாவிளான், பத்தமேனி, நவக்கிரி ஆகிய பகுதிகளில் சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான விவசாயப் பயிர்களும் விவசாய உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

விவசாயத்தை தொழிலாகக் கொண்ட சுமார் 5000 குடும்பங்கள் தமது வருமானத்தை இழந்துள்ளனர்.

அடுத்துவரும் போகத்துக்கு வெங்காயம் நடுவதற்கு தேவையான விதை வெங்காயம் பெறுவதும் மிக கடினமாக இருக்கும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (இ-72)

# அரசின் பாதுகாப்பு நிதிக்கு நூறுவீத வரிவிலக்கு சலுகை

கொழும்பு, ஜூலை 21

தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்கப்படும் பணத்திற்கு 100 சதவீத வரிவிலக்கு அளிக்கப்படும் என்று உள்நாட்டு வருமானவரி ஆணையாளர் நாயகம் திரு. இரத்தினசுந்தரம் அறிவித்தார்.

இதே வேளை—

பாதுகாப்பு நிதிக்கு காசோலை மூலம் பணம் அனுப்புபவர்களிடமிருந்து அதற்கான கமிஷன் பெறவேண்டாம் என்று சகல தபால் நிலையங்கள் மற்றும் உபதபால் நிலையங்களுக்கும் அரசு உத்தரவிட்டுள்ளது. (உ-எ)

# பனம் சீனி உற்பத்தி

சாவகச்சேரி ஏற்றுமதிக் கிராமிய மக்கள் கம்பனி என்ற நிறுவனம் பனம் சீனி உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

பனம் பாணியில் இருந்து சீனி உற்பத்தி செய்யும் வேலைகள் முன்பு ஆராய்ச்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

முன்னர் ஓரளவு உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட போதிலும், தற்போது பெருமளவில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதேநேரம் பனம் பாணி போதுமான அளவு உள்ளதாகவும், உடனுக்குடன் பனம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை, சிங்கநகர், வரணி, மீசாலை, சாசாலை ஆகிய பகுதிகளிலும் பெருமளவில் பனம் வெல்லம் உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## உணவுப் பொருள்கள்

வட்டுக்கோட்டை, ஜூலை 21

சங்கானை ப. நோ. கூ. சங்கம் ஊழியர்களுக்கு போனஸாக ரூபா 150 பெறுமதியான உணவுப்பொருள்களை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. இதற்கான அங்கீகாரம் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரிடம் பெறப்பட்டு உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-161)

## வேலணைக்கு இடமாற்றம்

ஊர்காவற்றுறை, ஜூலை 21

காரைநகர் றெட்பாணா கட்டடத்தில் அமைந்திருந்த ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் 13 ஆம் திகதி தொடக்கம் வேலணை அரசினர் வைத்தியசாலையிலுள்ள ஒரு கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகிறது.

காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து ஏவப்பட்ட ஷெல்களால் இக்காரியாலயம் சேதமடைந்துள்ளது. (இ-18)

# யாழ்.- கொழும்பு பயணம் நடப்பது இப்படித்தான்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ். கொழும்பு பயணம் தடைப்பட்டுள்ள போதிலும் பலர் புதிய வழிகளால் எப்படியோ கொழும்பை அடைந்து விடுகிறார்கள்.

யாழ். நகரில் இருந்து ஓமந்தைவரை பஸ்கள் பயணிகளை கொண்டுசென்று இறக்குகின்றன.

அங்கிருந்து கால்நடையாகவும், டிராக்டர்கள் மூலமும் மக்கள் வவுனியாவைச் சென்றடைகின்றனர். அங்கு கத்தோலிக்க மதகுரு ஒருவரின் ஏற்பாட்டில் இராணுவ பாதுகாப்புடன் பஸ்களில் மதவாச்சிவரை செல்கின்றனர்.

மதவாச்சியிலிருந்து ரயில் மூலம் பயணிகள் கொழும்பை அடைகின்றனர்.

இதேவேளை மதவாச்சிக்கு பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ் அதே இராணுவ பாதுகாப்புடன் ரயிலில் வரும் பயணிகளை ஏற்றிக்கொண்டு வவுனியா கத்தோலிக்க ஆலயத்துக்குத் திரும்புகிறது.

அங்கிருந்து கால்நடையாகவும். டிராக்டர் மூலமும் ஓமந்தை வந்து அங்கிருந்து யாழ்நகரை அடைகின்றனர். (இ-9)

## சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை21

கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனையைச் சேர்ந்த சண்முகம் என்பவர் ஜிகாத் இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## தமிழ் இலக்கிய விழா ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 21

கொழும்பில் நடைபெற இருந்த தமிழ் இலக்கிய விழா கால வரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் நிலைமை சீராகியதும் புதிய திகதி அறிவிக்கப்படும் என்று இந்து சமய விவகார அமைச்சு அறிவித்துள்ளது. (இ-எ)

# ஆசிரியர்கள் ஓய்வூதியத்தை துரிதமாக வழங்கத் திட்டம்

கொழும்பு, ஜூலை 21

ஆசிரியர்களுக்கு ஓய்வூதியத்தைத் துரிதமாக வழங்க புதிய திட்டம் ஒன்றைக் கல்வி அமைச்சு செயற்படுத்த உள்ளது.

ஆசிரியர்களுக்கு, அவர்களின் சேவை விவரங்கள் அடங்கிய புறம்பான அட்டை ஒன்றை வழங்கும்படி அமைச்சு அதிகாரிகளை அமைச்சர் லலித் அத்துலத்முதலி பணித்திருக்கிறார்.

பென்ஷன் அட்டையுடன் இந்த அட்டையும் வழங்கப்படும். [இ-எ]

## வள்ளங்களில் பயணம் செய்யத் தடை

கொழும்பு, ஜூலை 21

மறு அறிவித்தல் வரை மட்டக்களப்பு வாவியில் வள்ளங்களில் பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது

பாதுகாப்புப் படையினர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர். (இ-எ)

## கிழக்கில் தமிழரின் அவலநிலை

யாழ்ப்பணம், ஜூலை 21

திருகோணமலை, மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களில் உள்ள தமிழர்கள் படையினரின்பாதுகாப்பின்றி வெளியே செல்லவும் முடியாது, உள்ளே வரவும் முடியாது.

இந்த அவல நிலையில் தமிழ் மக்கள் வாழ்வதாக திருகோணமலையில் இருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

எல்லைப்புறங்களில் தமிழ் மக்களை பழிவாங்க சிங்களக் குண்டர்கள் காத்திருப்பதால் தமிழர்கள் வெளியே செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது. (இ-3)


## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



திருமதி ஆனாசி ஆசிர்வாதம்

தோற்றம்: 09 - 05 - 1920

மறைவு: 21 - 06 - 1990

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
உங்கள் புன்னகை தவழும் இனிய முகம்
எம் கண்களில் தெரிகிறதே அம்மா!
எமக்கு நல்வழி காட்டி அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வளர்த்த தெய்வமே!
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து 31 நாட்கள் சென்றுவிட்டன அம்மா!
எங்கள் இதயத்தில் என்றும் நீங்கள் நீங்காது நிலைத்திருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள், சகோதரர், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை. (13761)

## இடம் மாற்றம்

புஸ்பா ரேட்ஸ் (எசன்ஸ் ஹவுஸ்)
11/4 A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனம் பாதுகாப்புக் கருதி கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது

★ புஸ்பா ரேட்ஸ் ★
(எசன்ஸ் ஹவுஸ்)
66/6, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(முடமாவடி) [13743]

## இடமாற்றம்

எமது அன்புக்குரிய தமிழீழ மக்களே!

வாடிக்கையாளரின் நன்மையைக் கருத்தில் கொண்டு எமது புத்தகசாலைகளை ஒட்டுமடம் சந்திக்கு அண்மையில் செபஸ்ரியார் வீதியில் 582/64 ல் அமைத்துள்ளோம் என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

மக்மிலன் புத்தகசாலை
ஓட்டுமடம் (சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந் புத்தகசாலை
ஓட்டுமடம் (சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
[சி-5274]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1969 - 7 - 17

மறைவு 1989 - 7 - 21

ஞானமுத்து பிலிப்குமார்

எங்கள் அன்புக் குமார்
ஆண்டவர் பாதம் நீ சென்று
ஆண்டொன்று கழிந்ததையா
ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஆறிடுமோ எம் துயர்

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர், அண்ணி, மாமாமார், மருமக்கள்.

தேவாலய வீதி, மல்லாகம். (13774)


# பரீட்சை திணிக்கப்படும்போது அதனை பகிஷ்கரிப்பதே ஒரேவழி

## தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21

பரீட்சை எம்மீது திணிக்கப்படும்போது அதனைப் பகிஷ்கரிப்பதே ஒரேவழி.

தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கைவிவரம்வருமாறு:-

வடக்கு கிழக்கின் தற்போதைய பாதகமான சூழ்நிலையைக் குறிப்பிட்டு ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு தமிழ் பேசும் மாணவர்கள் இன, பிரதேச, கருத்து வேறுபாடுகளை மறந்து போராடுகிறார்கள். பரீட்சை ஒத்திவைக்கப்படாத பட்சத்தில் அதனைப் பகிஷ்கரிப்பதெனவும் முடிவு மேற்கொண்டுள்ளார்கள்.

பகிஷ்கரிப்பானது மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை அல்ல.

முன்பு தென்னிலங்கையில் மேற்கொண்டதுபோல அரசு தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு [illegible] சையை ஒத்திவைக்க வேண்டும் என்றே கோருகிறோம்.

சிவில்நிர்வாகம் சீர்குலைந்துள்ளதால் தேர்தலை நடத்த முடியாது என்று அரசு அறிவிக்கின்றது. கிழக்கு இலங்கை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை நடத்தும் சூழ்நிலை அங்கு இல்லை என்பதை உணர்ந்து அதனைக் கொழும்புக்கு இடம்மாற்ற அரசு யோசிக்கின்றது.

இந்நிலையில் பரீட்சையை மட்டும் எப்படி நடத்தமுடியும்? ஆகவே அரசு எம்மீது பரீட்சையைத் திணிக்கும்பட்சத்தில் அதனைப் பகிஷ்கரிப்பதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை.

மாணவர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்துக்குத் தடையாக அமையும் எந்த நடவடிக்கையையும் மாணவர்களாகிய நாம் ஒன்றிணைந்து முறியடிப்போம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிரஸ்தாப ஒன்றியத்தால் [illegible] தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. கல்வித் திணைக்களங்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் பரீட்சை நடத்துவதற்காகஎந்தநிர்வாக நடவடிக்கையிலும் ஈடுபடாமல் ஒத்துழைப்பைக் கோருதல்.

2. எமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள், தனிப்பட்டோரின் வகுப்புக்களை நடத்துவதை நிறுத்துமாறுகோருதல்.

3. பரீட்சை ஆகஸ்ட்10 ஆம் திகதி நடத்தப்பட்டால்ஒன்றிரண்டு அதனைப் பகிஷ்கரித்தல். அத்துடன் வடக்கு, கிழக்கு மாணவர்கள் ஏனைய பகுதிகளில் பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதைத் தவிர்த்தல் - அவ்வாறு எமது கோரிக்கைகளைப் புறக்கணித்துப் பரீட்சைக்குத் தோற்றினால் அவர்கள் எமது விரோதிகளாகக் கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல். [இ]


## இடமாற்றம்

17/1 சின்னக்கடையில் இயங்கிவந்த
சிவலிங்கம் வைத்தியசாலை
27, புங்கங்குளம் வீதிக்கு (கணக்கர் சந்தி)
இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
(13776)

## அறிவித்தல்

16 - 07 - 1990 அன்று விக்னா கல்வி நிலைய மண்டபத்தில் இடம்பெயர்ந்த அகதிகள் சம்பந்தமான கலந்துரையாடலில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

(1) எமது கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவரும் தங்களால் இயன்ற உணவுப் பண்டங்களை (அரிசி, தேங்காய்) ஒப்படைத்தல்.

(2) ஒவ்வொரு மாணவரும் தங்களால் இயன்ற உடுப்புகளை சேகரித்து ஒப்படைத்தல்.

(3) பொது இடங்களில் பதுங்குகுழி அமைத்தல்.

(4) மாணவர்கள் தங்கள் ஊரிலுள்ள அகதிகளின் விவரங்களைத் திரட்டி சமர்ப்பித்தல்.

(5) க. பொ. த. (உயர்) பரீட்சையை ஒத்திவைக்குமாறு மகஜர் ஒன்றை கல்வித் திணைக்களத்தினூடாக கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

மு. குறிப்பு:

I எமது மாணவர்களில் தொண்டர் அடையாள அட்டை எடுக்காத மாணவர்கள் காலை 9 மணி முதல் 12 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

II அகதிகளுக்காக திரட்டப்பட்ட உணவு வகைகளையும், உடுப்பு வகைகளையும் காரியாலயத்தில் (9 — 12 மணி) ஒப்படைக்கவும்.

அதிபர்,
விக்னா கல்வி நிலையம்.
(சி-5280)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### நாட்டபட்ட புண்!

இலங்கையில் மனித அடிப்படை உரிமைகள் மீறப்படுவது குறித்து அமெரிக்க மனித உரிமை இயக்கம் கவலை தெரிவித்திருக்கிறது.

தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தை, மிகக் குறிப்பாக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த பின்னர் இலங்கை அரசாங்கச் சார்பில் மனித உரிமைகள் மீறப்படுவதை பிரஸ்தாப இயக்கம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது. மனித உரிமைகளை மீறும் விதத்தில் இதுவரை மொத்தம் 11 ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டனர் என்ற புள்ளி விவரமும் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

இப்போது வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் பொதுமக்களை அரச படைகள் சுட்டுக் கொல்வதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்திருக்கிறது — என்றும் இயக்கம் கவலை தெரிவித்திருக்கிறது.

அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு மனித உரிமைகள் மீறப்படுவதை தம்மால் சகித்துக் கொள்ள முடியவில்லை எனவும் அறிக்கை குறிப்பிடுகிறது. அதாவது சட்டத்தையும், அரசமைப்பையும் பேணிக்காக்க வேண்டிய அரச படைகள், அரசமைப்புச் சட்டத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை மீறுகின்றன என்று அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

அரசாங்கம் நடத்தும் யுத்தம் விடுதலைப் புலிகளுடன்தான்; தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல; என்று ஜனாதிபதி பிரேமதாசாவும், பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவும் "கத்தோ கத்தென்று" கத்துகிறார்கள்! வாராந்தம், கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளை அழைத்து, மாநாடு நடத்தி தமது கைகளில் இரத்தக் கறை படியவில்லை என்று சொல்கிறார்கள்.

நேற்று முன்தினம் இப்பத்தியில் நாம் குறிப்பிட்டிருந்தது போல, அக்கிரமங்களையும், உள்நோக்கங்களையும் நீண்டகாலத்துக்கு மூடிமறைக்க முடியாது என்பதை அமெரிக்க மன்னிப்புச்சபையின் அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையின் அரசமைப்பில் ஒவ்வொரு பிரசைக்கும் அடிப்படை மனித உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித அடிப்படை உரிமை சாசனத்தின் முக்கிய பகுதிகள் தனி ஓர் அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழர்கள் எந்த அடிப்படை உரிமையும் இல்லாமல் எல்லா வகைகளிலும் இம்சிக்கப்படுகிறார்கள்!

அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் விவகாரம் இந்த நாட்டின் ஆறாத புண். வருடக் கணக்காக அதிலிருந்து சீழ் வடிந்து கொண்டிருக்கின்றது காலத்துக்குக் காலம், அது உப்பி, பொருமி, வெடித்து புழுக்கிளம்பும் நிலைக்கு வரும்!

அவ்வேளைகளில் தான் உலக மனித உரிமை இயக்கங்கள் குரல் கொடுக்கும் ஆனால் அந்தப் புண்ணை மாற்றிக் கொள்ள ஐ. நா. வோ அல்லது உலக நாடுகளோ இன்னும் இலங்கை அரசுக்கு 'மருந்து'' -டோஸ் கொடுக்க முன்வரவில்லை.

மனித உரிமைகள் மீறப்படுவதால் அரசுக்கு வழங்கப்படும் உதவிகளை நிறுத்தப் போவதாக வெளிநாடு எதுவும் அறிவித்தது உண்டா? இரண்டு மூன்று நாடுகள் அல்லது ஐ. நா. ஒரு தீர்மானத்தை எடுத்துச் செயற்படுத்தினால்- மருந்து கொடுத்தால்- மட்டுமே இலங்கையின் நெடுநாட்பட்ட புண்ணை ஆற்ற முடியும்! வெறும் அறிக்கைகள் எதையும் சாதிக்காது!

# மட்டு. பல்கலை மாணவர் எவரும் யாழ். நோக்கிப் புறப்படவில்லை

## புதன் இங்குவந்து சேர்ந்த விரிவுரையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 21 கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் வடபகுதியைச் சேர்ந்த மாணவர்களும், ஊழியர்களும் வந்தாறுமூலையில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் சுகமாக இருக்கின்றனர். அவர்களில் எவரும் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படவில்லை.

கடந்த மாதத்தில் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட தினத்தன்று யாழ்ப்பாணம் வருவதற்கென்று பஸ் ஆசனம் பதிவதற்குச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. மகேசன் (புலோலியைச் சேர்ந்த இவருக்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் கிடைத்திருந்தது) ஹெலி சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

அதைவிட கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எவருக்கும் எவ்வித அசம்பாவிதமும் நடக்கவில்லை.

இவ்வாறு உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார். மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் இம்மாதம் 11 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டுக் கொழும்பு சென்று, அங்கிருந்து 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் புறப்பட்டு 18 ஆம் திகதி வீடு வந்து சேர்ந்தார்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர் ஊழியர் நிலை குறித்தும் மட்டக்களப்பு நிலை குறித்தும் பிரஸ்தாப விரிவுரையாளர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள் சில பஸ்களில் யாழ். நோக்கி வந்தார்கள் என்றும் பின்னர் அவர்களுக்கு நடந்தது குறித்து எதுவும் தெரியவில்லை என்றும் தகவல்கள் வெளியாகி இருந்ததாக அறிகிறேன் ஆனால் அவை சரியானவை அல்ல.

கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி யுத்தம் ஆரம்பமானதை அடுத்து பல்கலைக்கழக மாணவர்களில் வடபகுதி மாணவர்கள் 60 பேரும் ஊழியர்கள் 25பேரும் விடுதிகள் வீடுகளைவிட்டு பல்கலைக்கழக வளாகத்தினுள் சென்று இருந்து கொண்டோம். ஏனைய மாணவர்களான மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களும் முஸ்லிம் மாணவர்களும் வெளியேறி வீடுகளுக்குச் சென்று விட்டனர்.

எம்முடன் செங்கலடி, கிரான் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறிய தமிழ் மக்களும் அகதிகளாக வந்து தங்கினர்.

நாமும் தமிழ் அகதிகளும் நீண்டநாட்களாக வளாகத்தில் இருந்தோம்.

ஜூன் மாதம் 23 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் சுமார் 500 இராணுவத்தினர் எமது பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தனர். இவர்கள் பொலநறுவ, புனானை, வாழைச்சேனை, கும்புறுமுனை ஊடாக செங்கலடியை வந்தடைந்தவர்கள்.

இராணுவத்தினர் எங்கள் அனைவரையும் வரிசையாக நிறுத்தி அடையாள அட்டைகளை சோதித்தனர். பின்னர் பல்கலைக்கழக வளாகத்தையும் சோதனையிட்டனர். எங்களைச் சோதனையிட்ட இராணுவத்தினர் மட்டக்களப்புக்குச் சென்றுவிட்டனர். பின்னர் விடுதலைப் புலிகள் இந்த இடங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

### வெளியே செல்லத் தொடங்கினோம்

இதனையடுத்து நாம் வெளியே சென்று நடமாடத் தொடங்கினோம். அங்கு பொருள்களுக்கு எதுவித தட்டுப்பாடும் கிடையாது நாம் பொருள்களை வாங்கி வந்து சமைத்துச் சாப்பிட்டோம்.

தற்பொழுது மட்டக்களப்பில் படையினர் இரண்டு மைல் சுற்றாடலிலேயே நிலைகொண்டுள்ளனர்.

### கொழும்பு சென்றேன்

இம்மாதம் 11ஆம் திகதி மட்டக்களப்பு அரச அதிபரின் ஏற்பாட்டின் பேரில் 6 பஸ்கள் கொழும்பு நோக்கி புறப்பட்டன. நானும் அவற்றில் ஏறிக்கொண்டேன்.

பஸ்கள் வாழைச்சேனை வரை எதுவித பாதுகாப்பும் இன்றி வந்தன. பின்னர் ஓட்டமாவடிப் பாலத்தில் பஸ்ஸை சோதித்த இராணுவத்தினர் தமது பாதுகாப்புடன் கொழும்புக்கு எம்மை கூட்டிச் சென்றனர். அங்கிருந்து நான் இம்மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டேன்.

அரச அதிபர் ஏற்பாடுசெய்த பஸ்களில்வேறெந்தபல்கலைக்கழக மாணவரோ அன்றி ஊழியர்களோ வரவில்லை. அவ்வாறு வெளியேறி வர எமது பல்கலைப் பீடத் தலைவர் எவரையும் அனுமதிக்கவில்லை வவுனியா வரை இராணுவம் பாதுகாப்புத்தர முன்வந்தால் மட்டுமே தாம் மாணவர்களை வீடு செல்ல அனுமதிக்கப் போவதாக அவர் சொன்னார் — இவ்வாறு அந்த விரிவுரையாளர் கூறி முடித்தார். (அ 9)

# போதிய உணவு, தண்ணீரின்றி விடத்தல்தீவில் அகதிகள் அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 21 வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து அகதியாகி இந்தியாவுக்குச் செல்வதற்காக விடத்தல்தீவு சென்ற 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உணவு, குடிதண்ணீர் இன்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

அங்கு சென்று திரும்பிய அரசு சார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவுக்குச் செல்லமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதால், விடத்தல் தீவில் இவர்கள் தங்கியுள்ளனர்.

உணவுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. கடைகள் இல்லை, இதனால் கிடைக்கும் உணவை மக்கள் பங்கிட்டு உண்கிறார்கள்.

நீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. குளிக்கும் தண்ணீர் சென்று ஒரு கிடங்கில் விழுகிறது. அந்தக் கழிவு நீரில் மக்கள் முகம் கழுவுகின்றார்கள். மரங்களுக்குக் கீழ் நிலத்தில் மக்கள் படுக்கிறார்கள். தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. (இ-3)

# கொண்டாட்டங்களைக் குறைத்து சேமிப்பை அறிமுகப்படுத்துங்கள்

(முன் தொடர்ச்சி)

(எ) அகதிகளுக்கான தொழில்வாய்ப்பு வருமானம் தொடர்பான செயற்திட்டங்களில் கூட்டுறவுத்துறை அக்கறை காட்டுதல் வேண்டும் இதில் ரோட்டரிக்கழகம், அரிமாச் சங்கம், போன்றவற்றுடன் இணைந்த செயற்திட்டங்கள் அவசியமாகும்.

வெறுமனே பண்டங்களை வழங்குதல் நீண்ட காலத்திற்கு சாத்தியமற்றது. இதனால் ஒவ்வொரு பிரதேசச்

**இன்றைய பொருளாதாரம்**

சூழலுக்கும் ஏற்றவாறு பெண்கள், இளைஞர் சார்ந்த செயற் திட்டங்களைத் தீர்மானிக்கவேண்டும். உற்பத்தி, நிதியிடல், சந்தைப்படுத்தல் என்பன கவனமாகத் திட்ட

**பகுதி 6**

மிடப்பட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஏ) கூட்டுறவுக்கிளைகள் மாணவருக்கான பாட நூல்கள், சீருடைத் துணிகள் என்பவற்றை நியாய விலையில் பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு விற்கலாம். போக்குவரத்துச் சேவைகளையும் நியாயமான கட்டணத்தில் ஏற்பாடு செய்து பிராந்திய ரீதியில் உதவமுடியும். இதனால் பெற்றோரின் வாழ்க்கைச் செலவு குறைக்கப்படும்.

### சேமிப்புத் தினங்களை அறிமுகப்படுத்த வேண்டும்

(ஐ) கூட்டுறவு நிறுவனங்கள் வருடத்தில் இரண்டு தினங்களையாவது சேமிப்புத்

**மா. சின்னத்தம்பி**
**[B. A B Phil Hons]**
துணை ஆசிரியர்,
பொருளியலாளன்

தினங்களாக பிரகடனப்படுத்த வேண்டும். அரசு அல்லாத சுயவிருப்புடைய நிறுவனங்கள், வங்கிகள் நிதிக் கம்பனிகள் ஆகியவற்றின் அனுசரணையைப் பெற்று இத்தினத்தைக் கொண்டாட வேண்டும்

இது நீண்டகாலத்தில் யுத்த நெருக்கடிகள் குறைந்த பின் செய்யக்கூடியதாகும். குடும்பப் பெண்கள், மாணவர்கள் கட்டாயம் சேமிப்பதற்கான தூண்டுதல்களை வழங்கவும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கக் கூடியதாக – சிக்கனப் பழக்கங்களை வற்புறுத்தவும் இத்தகைய சேமிப்புத் தினங்கள் உதவும்.

செலவிடுவதற்காக ஒன்று சேர கொண்டாட்ட தினங்கள் பல உள்ளன. ஆனால் சேமிப்புத் தினங்கள் எதுவும் அவ்வாறில்லை [illegible] இதனை முன்வ[illegible] வேண்டும்.

3. தொழில் நிறுவனங்களும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவையும் தமக்குரிய இலக்குகள், அதிகாரங்கள், நிதியாற்றல் என்பவற்றின்படி திட்டமிட்டுச் செயற்படும்.

அவற்றோடு நெருக்கடிகளுக்கு ஏற்ற மாற்றுத்திட்டங்களையும் பிராந்திய நெருக்கடிக்கேற்ற இயைபுடைய தீர்மானங்களையும் மேற்கொள்வது நல்லது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் தொழில் நிலையங்கள், வர்த்தக நிலையங்

**தாக்கங்களும் தடுப்பு வழிகளும்**

கள் பரவலாக்கப்படும் வாய்ப்பு அதிகரிக்கும்.

ஆனால் கூட்டுறவு அமைப்புக்களைச் சிதைத்து விடாத வகையில் இவற்றைச் செயற்படுத்துவது இத்தகைய பிரதேசங்களுக்கு மிகவும் முக்கியமாகும்.

இவ்வாறான சிராக்கச் செயன்முறைகள் நீண்ட காலத்தில் இப்பிரச்சனையிலிருந்து மீட்டுக் கொள்ள ஓரளவு உதவுமெனக் கருத முடியும். கல்வியாளரும், ஆராய்ச்சியாளரும் புதிய அக்கறை [illegible] (முற்றும்)

# யாழ். ரோட்டரிக் கழகம் அகதிகளுக்கு நிவாரண உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 21 யாழ். ரோட்டரிக் கழகமும், இன்ரறாக்ட் கழகங்களும் இணைந்து செயற்படுத்தும் அகதிகள் நிவாரணத் திட்டத்தில் சேகரிக்கப்பட்ட பொருள்களின் ஒரு தொகுதி வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஊடாக அகதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இயங்கும் இன்ரறாக்ட் கழகங்களின் மாணவ மாணவியர் நிவாரணப் பொருள்களைச் சேகரித்துக்கொடுத்தனர்.

அகதி முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பொருள்களின் விவரம் வருமாறு:-

உடைகள் - 21 ஆயிரத்து 862 துண்டுகள், அரிசி - 36½ மூடைகளும் இரண்டு பக்கற்றுகளும், பால்மா-499 பக்கற்றுகள், தேங்காய் - 2682, சவர்க்காரம் - 880 துண்டுகள், திரிபோஷா - ஒரு மூடை. அரிசிமா - 2 மூடைகள், பிஸ்கட் - 6 பக்கற்றுகள், குளுக்கோஸ்- 10 பக்கற்றுகள், டின்மில்க்- 3 டின்கள், மருந்து வகைகள்- 5 பக்கற்றுகள், மெழுகுதிரி- 4 பக்கற்றுகள், பற்பொடி- 150 பக்கற்றுகள். (இ)

## முத்திரைச்சந்தி பஸ் நிலையம்:

# இடநெருக்கடியை தவிர்க்க புதிய ஒழுங்கு முறைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 21 நல்லூர் முத்திரைச்சந்தி பஸ்நிலையத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக புதிய ஒழுங்கு முறைகள் அமுல் செய்யப்பட உள்ளன.

பஸ்நிலையம் அமைந்துள்ளதால் அப்பகுதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு வருகிறது.

புதிய நடைமுறைகள் வருமாறு:

★ வாகனங்கள் செம்மணி வீதியூடாக உள் பிரவேசிக்க முடியும். வெளியே வர முடியாது.

★ குமார வீதியூடாகவே சகல வாகனங்களும் வெளியே செல்ல வேண்டும்.

★ கடைகள் மாநகரசபைக் காணிகளில் ஒரு பகுதியில் அமைக்கப்பட வேண்டும். ஓட்டோ, டாக்சிகளை மறுபுறத்தில் நிறுத்த வேண்டும்.

★ சகல மினிபஸ்களும் கல்வித் திணைக்களத்துக்குச் சொந்தமான வளவில் நிறுத்தப்பட வேண்டும்.

★ மினிபஸ், டாக்சி, ஓட்டோ, கடை உரிமையாளர்கள் நல்லூர் வட்ட அவை அலுவலகத்தில் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும். [இ-3]

## வடக்கு - கிழக்கு

# அரசாங்க ஊழியர் சம்பளம்

கொழும்பு, ஜூலை 21 வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கான ஜூன் மாதச் சம்பளம் அருகில் உள்ள மாவட்டத்தில் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பிராந்திய அலுவலகத்தில் வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுமதி வழங்கப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டு உள்ளது.

சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பாதுகாப்பு நிலைமை காரணமாகவே வேலைத்தலத்துக்குச் செல்லமுடியாதிருந்தது என்று திணைக்களத் தலைவர்கள் திருப்தி அடையும் பட்சத்திலேயே இவ்வாறு சம்பளம் வழங்கப்படும்.

நிலைமை வழமைக்குத் திரும்பும் வரையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள எந்தவொரு மாவட்டத்தில் அல்லது மாவட்டத்தின் ஒரு பகுதியில் பாதி மாதமும் இந்த சலுகையை அளிப்பதற்கு அமைச்சரவை பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுமதி வழங்கி உள்ளது. [இ-எ]

## அப்பாவித் தமிழருக்காக

# "இரத்தக் கண்ணீர்" வடிக்கிறார் ரஞ்சன்!

கொழும்பு, ஜூலை 21 வடக்கு- கிழக்கு யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து அவர்களுக்காக இரத்தக் கண்ணீர்வடிக்கிறாராம் அரசாங்க அமைச்சர் ஒருவர்!

அவர் வேறு யாருமல்லர் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா தான்!!

அவர் கடந்த வியாழக்கிழமை இரவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கிலசேவைக்குவழங்கியபேட்டியில் இப்படி நீலிக்கண்ணீர் வடித்தார்.

பேட்டியின் போது அவர் தெரிவித்ததாவது:-

கேள்வி:- இன்றைய இலங்கை நெருக்கடியில் இந்தியாவின் தலையீடு இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

ரஞ்சன்:- தலையிடாது என்று நம்புகின்றேன். அப்படித்தலையிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை இந்தியா எதிர்நோக்க வேண்டிவரும்.

கேள்வி:- என்ன மாதிரியான விளைவுகளை இந்தியா எதிர்நோக்க நேரிடும்?

ரஞ்சன்:- அவைபற்றி இப்போது சொல்ல முடியாது.

கேள்வி:- தற்போதைய சண்டையில் அப்பாவி மக்கள் கொலலப்படுவது பற்றி......

ரஞ்சன்:- அவர்களுக்காக எனது இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது. இது தவிர்க்கப்படமுடியாத ஒன்று; கவலைக்குரியதுமாகும். (அ-எ)

# மாவையில் பஞ்சரதோற்சவம்

காங்கேசன்துறை, ஜூலை 21 பக்தர்கள் படைசூழ மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் பஞ்சரதோற்சவம் நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

காலை ஏழு மணிக்கு மூர்த்திகள் ரதத்தில் பவனிவந்தனர். ஆயிரக் கணக்கில் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

காவடி எடுத்தும், பிரதிஷ்டை செய்தும், அடிஅழித்தும் மக்கள் தமது நேர்த்திகளைப் பூர்த்தி செய்தனர்.

இன்று காலை ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஆலயத் தீர்த்தக் கிணற்றில் நடைபெறும். (இ-68)

# அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 21 கொழும்புத்துறை, வளன்புரம் ஐக்கிய சனசமூக நிலைய மாதர் அமைப்பின் மூலம் சேகரிக்கப்பட்ட உடைகள் மற்றும் உணவுப் பொருள்கள் யாவும் ''இன்ரறக்ட்'' கழகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவை வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த அகதிகளுக்கு விநியோகிக்கப்படும்! (ஒ)

# ப. நோ. கூ. ச. கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 21 யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள், வங்கிச் சேவை உத்தியோகத்தர்கள், உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-10)

# இனப்படு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அகதிகள் ஆகியுள்ளனர்.

அகதிகளாக கோயில்களில், பாடசாலைகளில் தஞ்சமடைந்த பல அப்பாவித் தமிழ்ப் பெண்கள் சிங்களப் படையால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப் பட்டுள்ளனர். பல இளம் ஆண்களும், பெண்களும் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட பின் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். டயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர். பல அகதி முகாம்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டுள்ளன. இதனால் பல்லாயிரக் கணக்கான அகதிகள் முகாம்களை விட்டு வெளியேறி காடுகளில் வாழ்கின்றனர்.

இதனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் உணவின்றி, போதிய மருத்துவ வசதியின்றி இறக்கின்றனர்.

கடலில் அகதிகளாக இந்தியா தப்பிச் செல்ல முயன்ற 300 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் பலரது உடல்கள் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளில் வந்து ஒதுங்குகின்றன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் தமிழ் மக்களுக்கு எல்லா விதமான உதவிகளையும் செய்து வருவதாக சிறிலங்கா அரசு கூறி வருகின்றது. ஆனால் நடைமுறையில் எதுவும் செய்யப்படவில்லை.

தமிழீழத்தில் எந்த மாவட்ட வைத்திய சாலையும் இயங்கவில்லை. தமிழ் மக்கள் பயன்படுத்தும் எந்த வைத்திய சாலையிலும் போதிய மருந்துகள் இல்லை; ''எக்ஸ்றே'' (படம் பிடிக்கும் இயந்திரம்) இயந்திரங்களும் இல்லை.

பல சர்வதேச அமைப்புகளுக்கூடாக தமிழீழ மக்களுக்கு உதவுவதாகக் கூறி சிறிலங்கா அரசு உலகை ஏமாற்றுகின்றது. குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் உதவுவதாகக் கூறி வருகின்றது.

கிழக்கு மாகாணத்திற்கு இதுவரை எங்குமே உணவுப் பொருள்களோ, மருந்துப் பொருள்களோ அனுப்பப்படவில்லை.

இதுவரை வடக்கு மாகாணத்திற்கு 12 லொறிகளில் 50 தொன் உணவுப் பொருள்கள் மட்டுமே அனுப்பப்பட்டது. இது அரை நாளுக்குக் கூட போதாது. இதைத்தான் சிங்கள அரசு பெரிதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக செய்ததாகக் கூறுகின்றது.

சிங்கள தேசம் இந்த சர்வதேச அமைப்புகளுக்கூடாகத்தான் தமிழீழ மக்களுக்கு எல்லா உதவிகளும் செய்வதாக பொய் கூறி வருகின்றது.

இந்த அமைப்புகள் எதுவுமே சிங்கள அரசின் பொய்ப் பிரச்சாரத்தைமறுத்ததில்லை. இதனால் ஏதோ ஒரு வகையில் இவர்கள் சிங்கள அரசின் இனப் படுகொலைக்கும் துணை போகின்றார்கள்.

சர்வதேசம் எமது மக்களுக்குச் செய்யும் உதவிகள் கூட சிங்கள தேசத்திற்கே செல்கின்றது.

சர்வதேச உலகமும், உலகில் வாழும் 8 கோடி தமிழ் மக்களும் தமிழீழ மக்களை சிங்கள ஆக்கிரமிப்பாளரின் இனப்படுகொலையில் இருந்து காப்பாற்ற தமிழீழ மக்களுக்கு நேரடியாக உதவ முன் வரவேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தன் திருவிழா
மில்க்வைற் விற்பனை நிலையத்தில்

ரூபா 25/க்கு சோப் வாங்குவோர்க்கு
அழகிய பொலித்தீன் பை.
அகத்திக் கன்று, கரிசலாங்கண்ணி,
கீரைவிதை அன்பளிப்பு.

மேலுறைகளுக்கான அன்பளிப்புகளும்
வழங்கப்படும்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# உதயன்

21 - 7 - 1990 சனிக்கிழமை

நிருண்டு நிலமுண்டு நீமியா உரமுண்டு
நீமியா உரம்
பாவித்து நிரம்ப விலைச்சளைப்
பெறுவோம்.

பக்கெற் ஒன்று விலை ரூ. 5.00
10 பக்கெற் வாங்குவோர்க்கு ரூ 40.00
சகாய விலையுடன்
அரிய கைநூல் அன்பளிப்பு

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம், முல்லைத்தீவுக்கு கப்பலில் உணவு வரக்கூடும்

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ்ப்பாணத்துக்கும், முல்லைத்தீவுக்கும் கப்பல் மூலம் உணவுப்பொருள்களைக் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஆயிரத்து 500 தொன் மாவுடன் காங்கேசன்துறை வந்த கப்பலில் இருந்து மாவை இறக்குவதற்குப் பாதுகாப்புச் சபையின் அனுமதி இடைக்காததால் கப்பல் திரும்பிச் சென்றது.

தற்சமயம் கப்பல் மூலம் உணவுப் பொருள்களை அனுப்ப பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து கப்பல் மூலம் உணவுப்பொருள்களை அனுப்ப அத்தியாவசிய சேவைகள் நாயகம் சம்மதம் தெரிவித்துள்ளாரென அறிய வருகிறது.

கொழும்பில் இருந்து அரிசி சீனி, பால்மா, எரிபொருள் ஆகிபவற்றைஏற்றிக்கொண்டு புறப்படும் கப்பல் திருகோணமலை சென்று மாவையும் ஏற்றிக்கொண்டு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் கொண்டு வரப்படும் ஒரு பகுதி உணவுப் பொருள்கள் முல்லைத்தீவில் இறக்கப்பட்டு மீதி யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் எங்கு பொருள்களை இறக்குவது என்பது பற்றி இன்னமும் முடிவாகவில்லை. பெரும்பாலும் காங்கேசன்துறை பழைய இறங்கு துறையில் இறக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முயற்சி பயனளிக்குமானால் தொடர்ந்து கப்பல்கள் மூலமாக உணவுப் பொருள்கள் கொண்டுவரப்படும் எனவும் தெரிய வருகிறது. (இ-5-3)

## வவுனியாவில் ஓய்வூதியம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியக் காரர்களுக்கு இம் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நொச்சி மோட்டை தமிழ் வித்தியாலயத்தில் இயங்கும் தற்காலிக செயலகத்தில் வைத்து பணமாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

இம் மாதத்துக்கான வவுச்சர்கள் கொழும்பில் இருந்து வராத காரணத்தால் குறிப்பிட்ட தொகை மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் ஆசிரியர்கள் அல்லாத மற்றைய ஊழயர்களுக்கும் மாதச் சம்பளம் காசாக வழங்கப்பட்டு வருகிறது.

இடம்பெயர்ந்தோருக்கான இரண்டு வார நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

## தென்மராட்சியில் ஹெலிகள் வாகனங்கள் மீது சூடு!

பச்சிலைப்பள்ளி, ஜூலை 21
நேற்று முன்தினம் வியாழக்கிழமை முழுநாளும் எட்டு ஹெலிகள் அணி, அணியாக தென்மராட்சிப் பகுதியில் சுற்றித் திரிந்தன.

அந்த ஹெலிகள், வாகனங்கள் மீதும் குடியிருப்புப் பகுதிகள் மீதும் திடீர் திடீரென வேட்டுக்களைத் தீர்த்தன.

அதனால் தென்மராட்சிப் பகுதி முழுவதும் வெறிச்சோடின. பளைப் பகுதியிலுள்ள கடைகள் மூடப்பட்டன. மக்களும் நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டனர்.

தாளையடியிலிருந்து சாவகச்சேரிக்கு சென்ற வாகனம் மீது கச்சார்வெளிச் சந்தியில் வைத்து ஹெலியிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதனால் அதில் பயணம் செய்த நால்வர் காயமடைந்தனர்.

அவர்கள் பளை வைத்தியசாலையிலும் மந்திகை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

மீன் ஏற்றிக்கொண்டு வந்த பல வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

கிளாலிப் பகுதியிலும் ஹெலிகள் பல தடவைகள் வேட்டுக்களைத் தீர்த்தன. [ஒ-117]

## கல்லுக் கட்டி வாவியில் தள்ளினர்

யாழ்ப்பாணம், ஜூலை 21
மட்டக்களப்பில், கல்லடியைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவரை இராணுவத்தினர் கல்லில் கட்டி வாவிக்குள் போட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வியாபாரியை முதலில் கைதுசெய்த இராணுவத்தினர், முதலில் அவரது உடலில் உரப்பை ஒன்றைக் கட்டி அதனைக் கற்களால் நிரப்பி மட்டக்களப்பு வாவிக்குள் தள்ளிவிட்டனராம். (அ-9)

## முல்லைத்தீவில் கடும் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 21
கடந்த வியாழனன்று முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இரு சாராருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது. ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றித் தெரியவரவில்லை. [உ-9]

## மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ து. குமாரசாமிஐயர்

புன்னாலைக் கட்டுவன் குமார கோட்டத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் பிரம்மஸ்ரீ து. குமாரசாமிஐயர் 20 - 07 - 90 அன்று சிவபதமடைந்தார். இவர் நீலாம்பிகையின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரக் குருக்கள், புவனேஸ்வரி, வாகீஸ்வரி (ஆசிரியை, நெளுக்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோ. பாலகிருஸ்ணசர்மா (இ. போ. ச. கோண்டாவில்), ஜெ. ராஜலக்சுமி ஆகியோரின் மாமனாரும், தேவகி, சோமநாதன், சுந்தரராஜன், கிருத்திகா, மதுரா, திவ்வியா, பவித்திரா, செந்தூரா, ஆகியோரின் அன்புப் பேரனும் அபர்ணா தேவநாதவின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-07-90 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
புன்னாலைக்கட்டுவன், [13790]

### தம்பையா ஜெயராஜா

மானிப்பாய் (Happy House) ஐ பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ் சென்ற தம்பையா பொன்னு தம்பதிகளின் மூத்த புதல்வருமாகிய ஜெயராஜா காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், நவரத்தினம், ஜெயமணி, மகிழ்மலர், பத்மராணி, இராஜேஸ்வரி, அரியமணி, இந்திராணி, தவராணி ஆகியோரின் சகோதரருமாவர்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந. ஞானேந்திரன்
'Happy House'
மானிப்பாய். [13792]

### கந்தையா - குமாரவேலு

(இளைப்பாறிய கணக்காளர், இலங்கை மத்திய வங்கி, பொதுமுகாமையாளர் துரைராஜா அசோசியேற்ஸ்)

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் வாசியுமான கந்தையா குமாரவேலு அவர்கள் 1990-07-19 அன்று காலமானார். இவர் இந்திராணியின் அன்புக் கணவரும், விஜயகுமார் [ஹட்டன் நஷனல் வங்கி, பண்டாரவளை], வசந்தகுமார் [அமெரிக்கா], பிருந்தகுமார் [பொறியியலாளர், துரைராஜா அசோசியேற்ஸ், கொழும்பு] ஆகியோரின் அன்புத்தந்தையாரும், மைதிலி, கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகா, மதுரசன், லாவண்யா, கௌசல்யா, சரண்யா, அதிதரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 1990-07-21 [சனிக்கிழமை] காலை 9 00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
கு. பிருந்தகுமார்
(மகன்)
இந்துக்கல்லூரி வீதி,
மானிப்பாய். (13788)

## வவுனியாவில் அரச ஊழியரின் விடுதிகள் உடைக்கப்பட்டு கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூலை 21
வவுனியா நகரப் பகுதியில் அரச ஊழியர்களின் 52 விடுதிகள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுள்ளன.

அரச ஊழியர்கள் தமது விடுதிகளைப் பார்க்க கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இராணுவத்தினர் அனுமதி வழங்கி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அரச ஊழியர்கள் தமது விடுதிகளைச் சென்று பார்வையிட்டபோது, விடுதிகள் உடைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

வானொலிப் பெட்டிகள், புகைப்படக் கருவிகள் உடுபுடவைகள் போன்றவை கொள்ளையிடப்பட்டிருந்தன.

சில விடுதிகளில் அவசரத்தில் விட்டு விட்டு வரப்பட்ட நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## வேலணையில் ஒதுங்கியவை இந்திய மீனவரின் சடலங்களா?

வேலணை துறையூர் கடற்கரைப்பகுதியில் கடந்த புதன்கிழமை மாலையிலும், வியாழக்கிழமை காலையிலுமாக நான்கு ஆண்களின் சடலங்கள் கரை ஒதுங்கின.

இந்தச் சடலங்களில் ஒன்று தலையில்லாமலும் மற்றையது தலை சிதறிய நிலையிலும் காணப்பட்டது.

சடலங்களில் அணியப்பட்டிருந்த காற்சட்டைகளில் இந்திய நாணயங்களில் சில்லறைக் காசுகள் காணப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு பின்னர் காணாமற்போன மீனவர்கள் நால்வரின் சடலங்களாக இவை இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (உ-167)

## அச்சுவேலியில் வியாழன் ஹெலி ஷெல் தாக்குதல்

### வயோதிபர்படுகாயம்; வீடுகள்சேதம்

அச்சுவேலி, ஜூலை 21
அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஹெலிகளில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இடையிடையே வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இதனால் இரு வீடுகள் சேதமடைந்தன. வயோதிபர் ஒருவர் கடும் காயங்களுக்கு இலக்கானார்.

பலாலியில் இருந்து அடிக்கடி புறப்பட்டுச் சென்ற ஹெலிகளே இந்தத் தாக்குதல்களை நடத்தின.

காயமடைந்த இடைக்காடு மேற்கைச் சேர்ந்த வயோதிபர் செல்லமுத்து நடராசா (வயது 70) ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கதிரமலை கோபி (வயது 18), கந்தசாமி (வயது 45) உட்பட இன்னும் சிலரும் காயமடைந்தனர். [ஒ-11]

## அரியாலையில் தமிழீழ மீட்புநிதி கூட்டம்

அரியாலை, ஜூலை 21
அரியாலை மேற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களுக்கான தமிழீழ மீட்புநிதி சம்பந்தமான விளக்கக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டமும் காலை 9 மணிக்கே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவுக்கென்று போய் புங்குடுதீவு வந்த 27 பேர்!

வேலணை, ஜூலை 21
இலங்கையில் இருந்து தமிழகம் நோக்கிப் புறப்பட்ட அகதிகள் படகு ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடைநடுவில் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

நடுக் கடலில் படகின் இயந்திரத்தில் ஏற்பட்டகோளாறே இதற்குக் காரணம் ஆகும்.

புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் பகுதியில் இப்படகு கரை ஒதுங்கியது. அதில் யாழ்ப்பாணம், கோண்டாவில், நீர்வேலி, கோப்பாய், திருக்கேதீஸ்வரம் பகுதிகளைச் சேர்ந்த ஏழு குடும்பங்களின்- 27 பேர் இருந்தனர்; அவர்களில் இருபத்தேழாமவர் ஒரு பதினைந்துநாள் சிசுவாகும்!

அவர்கள் அனைவரும் புங்குடுதீவு கண்ணகி அம்மன் கோவில் மடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான சகல நிவாரணஉதவிகளையும், வேலணை உதவி அரச அதிபர் திரு. [illegible] வழங்கினார். [ஒ-167]

## போராட்டத் தேவைக்கென வாகனங்கள் பெறப்படும்

### நேற்றைய கூட்டத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
நல்லூர் பிரதேச வாகன உரிமையாளர்கள் அனைவரிடமிருந்தும் — போராட்டத் தேவைக்கென — சுழற்சி முறையில் வாகனங்கள் பெறப்படும். அதற்காக 125 சிசிக்கு உட்பட்ட மோட்டார் சைக்கிள்கள், லொறிகள், மினிபஸ்கள், உழவு இயந்திரங்கள் என்பன பெறப்படும்.

வாகனம் தேவைப்படும் பொழுது பிரதேசப் பொறுப்பாளரின் கடிதத்துடன் வரும் போராளிகள் வாகனங்களை எடுத்துச் செல்வர்.

இவ்வாறு நேற்றுக்காலை 10 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்கத்தில் நடந்த நல்லூர் பிரதேச வாகன உரிமையாளருக்கான கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் நல்லூர் பிரதேச பொறுப்பாளர் ரங்கன் கலந்துகொண்டார்.

நேற்றைய கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் சில முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ வாகனங்கள்தேவைக்கு எடுத்துக்கொள்ளப் படுவது தொடர்பாக முன் அறிவித்தல் வழங்கப்படும். ஆயினும் காயமடைந்தவர்களை ஏற்றுவதாயின் அதற்கு விதிவிலக்கு உண்டு.

★ வாகனம் எடுக்க வரும் போது உதிரிப்பாகங்களைக் கழற்றி விட்டு, பாவனைக்கு உகந்ததல்ல எனக் கூறக் கூடாது. சகல வாகனங்களும் செலுத்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

★ எடுக்கப்படும் வாகனங்களில் பழுது ஏற்படின் அவை திருத்திக் கொடுக்கப்படும்.

★ பிரதேசப் பொறுப்பாளரின் கடிதம் இன்றி எடுக்கப்படும் வாகனங்கள் குறித்து முறையீடு செய்யப்பட்டால் உடனடியாகத் திருப்பி ஒப்படைக்கப்படும். (ஒ-9)

## தொற்று---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஸ்ரீலங்கா அரசு வீசிவரும் அதேவேளை, கிருமிகளைக் கொண்டு தமிழீழம் எங்கும் நோய்பரப்பி, தமிழீழ மக்களை அழிக்க புதிதாக முயல்வதாக நாம் சந்தேகிக்கிறோம்- என்றும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
தமிழ்பேசும் மாணவர் ஒன்றியம் தனது சகல பிரதிநிதிகளுக்குமான பொதுக்கூட்டம் ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடத்துகிறது.

## வவுனியா..,

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் மற்றைய மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டன. 2 ஆயிரம் குடும்பங்கள் இந்தியாவுக்குச் சென்று விட்டன. இன்னும் 4 ஆயிரம் குடும்பங்களே அகதிகளாக உள்ளன. இங்குள்ள தமிழர்களும் பதற்ற நிலையில்தான் வாழ்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## விமானத்திலிரு--

இந்தக் குண்டுகள் கீழே விழுந்ததும் அவை கொண்டிருந்த கொள்கலன் பிளந்து வெடிக்க உள்ளே இருந்த இரசாயனக் கரைசல் நாலாபுறமும் சிதறிப் பறந்தது.

அவை விழுந்த பகுதிகளில் பெரும் துர் நாற்றத்தைக் கிளப்பின.

சில குண்டுகள் வீடுகளின் மேல் விழுந்ததால் அந்த வீடுகளின் ஓடுகளும் மற்றும் பொருள்களும் சேதமுற்றன.

## இன்று

யாழ். பரியோவான் கல்லூரி சென் ஜோன் முதலுதவிப்படையைச் சேர்ந்தசகல அங்கத்தவர்களுக்குமான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறும்.

## தமிழர் படுகொலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

யின் கீழ் நின்று வெளிப்படுத்தியதற்காக அனைத்துக்கட்சியினருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

சட்டம் ஒழுங்கு கடுகளவும் பாதிக்கப் படாமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் — என்றார். (ஒ-எ-9)

## இந்திய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் ரபிராய் இந்தத் தகவலை வெளியிட்டதாக புதுடில்லி சென்ற இலங்கை அனைத்துக்கட்சிக் குழுவின் தலைவரும் இலங்கை நாடாளுமன்ற சபாநாயகருமான ஜனாப் எம்.எச் முகம்மது தெரிவித்தார். [உ-9]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பபாநோனா தில்லையர்

தெல்லிப்பழை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பிள்ளை தில்லையரின் (ஆஸ்பத்திரி லிகிதர்) அன்பு மனைவி பபாநோனா 20 - 7 - 99 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் தயாலட்சுமி யோகேந்திரன் (மருந்தாளர்), கனகரத்தினம் (டாக்டர் U.K), கமலாவதி (சட்டத்தரணி), மகேந்திரரத்தினம் (பொறியியலாளர், U.S.A), தனபாலரத்தினம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. லோகேந்திரன் (மருந்தாளர், ஓமான்), பிறேம்குமாரி (கணக்காளர், U.K). செ. சொர்ணலிங்கம் (பொறுப்பதிகாரி, டிஸ்றிலறீஸ் கொம்பனி, யாழ்ப்பாணம்), கௌரி (U.S.A), வசந்தா (டாக்டர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌரிகாந்தன், கௌரிசங்கர், சாந்தினி, ஷாமா, ஹரி, நிரோஷா, ரொஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியும், கந்தப்பிள்ளை, இராமலிங்கம், ஆச்சிமுத்து, சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

மரணச்சடங்கு நாளை (22 - 7 - 90) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல் :
தி. தனபாலரத்தினம்
தெல்லிப்பழை மேற்கு. (13680)

### சுந்தரம்பிள்ளை பேரம்பலம்

சுருவிலைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை பேரம்பலம் காலமாகிவிட்டார்.

இவர் முன்னை நாள் கொழும்பு மலர் கபே உரிமையாளரும், ஏகநாயகியின் அன்புக் கணவரும், வைஜெந்தி (போரூட்), ஜெயகுமார், ஜெயந்தினி (போரூட்), சுரேந்தினி, தயாளினி, பலாணி, கோகிலவதனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், க.மரகதம், சு.மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மு. திருநாவுக்கரசு, பூமணி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 21-07-1990 சனிககிழமை நண்பகல் 12-00 மணிக்கு சரவணை புன்னஸ்கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சரவணை. [13679] பே. ஜெயகுமார்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org